பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 9 (24—7—68) புதன் ★ வெளியூர்: ஆடி 10 (25—7—68) வியாழன் [இதழ்: 34

மூடப்பட்ட ஆலைகள்

விசாரிக்க மேலும் இரு குழுக்கள்

சென்னை, ஜூலை 24—

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள மேலும் 14 ஆலைகள் பற்றி விசாரணை செய்ய—தமிழக அரசின் வேண்டுகோளின்மீது—இந்திய அரசு, மேலும் இரு குழுக்களை நியமித்திருக்கிறது.

இவற்றையும் சேர்த்து மொத்தம் மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கண்ணியத்தால் வளர்ந்தது கழகம்

ஏச்சும் ஏளனப் பேச்சும் காங்கிரசை அழித்தது

சுப்பிரமணியத்தையும் மிஞ்சிவிட்டது நிலைமை!

'இனி அவர்களுக்கு வாக்களிக்கவும் மக்கள் வருவார்களா?'-- சென்னைக் கூட்டத்தில் அமைச்சர் கருணாநிதி முழக்கம்

சென்னை, ஜூலை 24---

" அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட நாம் அடக்கத்தோடு இருக்கிறோம்; மற்றவர்களை மதிக்கிறோம்; எதிரிகளாக இருந்தால்கூட மதிக்கிறோம்; அதனால் மக்கள் ஆதரவு தருகிறார்கள் -- வளருகிறோம்!

" ஆனால் காங்கிரசுக்காரர்களோ பிறரை மதிப்பதில்லை; 'இவனுக்கெல்லாம் அமைச்சர் பதவியா?' என்ற அவமதிப்பு எண்ணம்தான் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கிறது; இவ்விதம் பிறரை மதிக்காத காரணத்தால்தான் அவர்கள், மதிப்பிழந்தார்கள் -- தேய்ந்து போனார்கள்!

" இந்தப் பாடத்தை நினைவில் வைத்துக்கொண்டு-- அண்ணாவின் வழி சென்று -- அடக்க உணர்வைப் பெற்று -- மாற்றாரை மதிக்கும் பண்பு பெற்று -- கழகத் தோழர்கள் நற்பணியாற்றிட வேண்டுகிறேன் "

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், சென்னை 48-வது வட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

அண்ணா மன்றத் திறப்பு விழாவினையொட்டி குயப்பேட்டையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு தோழர் தாசன் தலைமை வகித்தார்.

தோழர்கள் வேலூர் நாராயணன், லோகநாதன் எம்.சி, சுந்தரதாசன், சானகிராமன், பழனி, தாமரைச்செல்வன், வரதன், சி.பி. இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் குழுமியிருந்தனர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

ஓர் இலாகாவையே இழிவுபடுத்தத் துணிவதா?

" காமராசர் பிறந்த நாள் விழாவில், நாகரிக உலகம் காணக் கூசும் விளையாட்டுக்களை விளையாடிக் காட்டியிருக்கிறார்கள்!

தவறு செய்கிற அதிகாரியை விமர்சிக்கும் உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு; ஆனால், ஓர் இலாகாவையே இழிவுபடுத்தவும், பழிசுமத்தவும் காங்கிரசுக்காரர்கள் முனைந்திருக்கிறார்கள்!

20-ஆண்டுக்காலமாக இந்த நாட்டில் எதிர்க் கட்சிகள் பல இயங்கிவந்திருக்கின்றன -- கடுமையான விமர்சனங்களைச் செய்திருக்கின்றன; ஆனால், ஓர் இலாகாவையே இழிவுபடுத்திடத் துணிந்ததில்லை; கேலி புரிந்திடவில்லை! அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததுண்டா என்பதைக் காங்கிரசுக்காரர்கள் நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும்!

ஆட்சி மாறலாம்; ஆனால், அரசாங்கமும் --- அரசாங்க அதிகாரிகளும் நிரந்தரமானவர்கள்.

ஒரு கலெக்டர் விரும்பினால், தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, ஒரு கட்சியில் சேர்ந்து உழைத்து அமைச்சராகலாம்; ஆனால், ஓர் அமைச்சர் கலெக்டராக மாற முடியாது!

இந்தத் தத்துவத்தை உணராத காரணத்தால்தான், காமராசர் பிறந்த நாள் விழாவில்—ஒரு போலீசு அதிகாரி குடிப்பது போலவும், ஒரு போலீசு அதிகாரி பெண்ணைக் கற்பழிப்பது போலவும் சிலர் நடித்துக்கொண்டு ஒரு வண்டியில் வந்தார்கள்!

இந்த வண்டி காமராசர் பிறந்த நாள் விழாவில் மட்டும் வரவில்லை -- குடியரசு தின விழாவிலும் வந்தது!

அதுமட்டுமல்ல; தென்காசித் தேர்தலின்போது, ஒரு பெரிய போலீசு அதிகாரி தி. மு. கழகத் தோழர்முன் கைகட்டி மண்டியிட்டு, 'நான் காவலன் அல்லன்; உனது ஏவலன்' என்று கூறுவதுபோல் கேலிச் சித்திரம் போட்டு பத்தாயிரக் கணக்கில் அதைச் சுவரொட்டியாக்கி ஒட்டியிருந்தார்கள்; போலீசு அதிகாரிகளைக் கேலி புரிந்திருந்தார்கள்!

அப்போதெல்லாம் பேசாத சுப்பிரமணியம் இப்போது பேசுகிறார்; காமராசர் பிறந்த நாள் ஊர்வலத்தில் வந்த இந்த வண்டிக்காக மன்னிப்புக் கேட்கிறார் -- அந்த மன்னிப்புக்கூட எப்போது கேட்கிறார்—போலீசு அதிகாரிகளைக் கேவலப்படுத்தும் அந்த வண்டி சென்னை நகரையெல்லாம் சுற்றிவிட்டுக் கடற்கரையை அடைந்தபிறகு மன்னிப்புக் கேட்கிறார்!

இது எதைக் காட்டுகிறது? சுப்பிரமணியத்தையும் மிஞ்சி அவரை எதிர்ப்பவர்கள் -- அவரது போக்கிற்கு எதிரானவர்கள் -- வளர்ந்துவிட்டார்கள் என்பதைத்தான்!

இதன் விளைவாக, சுப்பிரமணியம் தாமாகவே தமது தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும்! அல்லது அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றப்படுவார் என்ற நிலை உருவாகிவிட்டது!

எந்த அடிப்படையில் சென்னை நகரில் ஓட்டு கேட்பர்?

இன்றையத்தினம் காங்கிரசுக்காரர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலைப் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளனர்.

'காங்கிரசுக் கட்சி தனது தவறுகளைத் திருத்திக்கொண்டால் 40 இடங்களையாவது பெறும்' என்று நண்பர் வேலூர் நாராயணன் கூறினார்; அந்த அளவுக்குக்கூட மக்கள் அவர்களுக்கு இடம் தருவார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது!

ஏனென்றால், காங்கிரசுக்காரர்கள் இந்த 15 மாத காலத்தில் சென்னையைப் பற்றியும், சென்னை நகரத்து மக்களைப் பற்றியும் அவ்வளவு தூரம் இழிவாகப் பேசியுள்ளனர்!

மேலவையில் ஒரு காங்கிரசு உறுப்பினர், 'சென்னையில் உள்ள சோம்பேறிகளுக்கு மட்டும் ஒரு படி அரிசியா?' என்று கேட்டார்.

காலைமுதல் மாலைவரை அலுவலகங்களிலும், ஆலைகளிலும், தொழிற்கூடங்களிலும் நெற்றி வியர்வை சிந்தி உழைக்கும் உங்களைப் பார்த்து, 'சோம்பேறிகள்' என்று கூறிய அவர்களுக்கு 'மாநகராட்சித் தேர்தலில் மட்டும் ஓட்டளிக்க வேண்டும்' என்று கேட்க எந்த நாக்கு இருக்கிறது?

அப்படியே அவர்கள் கேட்டாலும், 'எங்களைத்தான் சோம்பேறிகள் என்றீர்களே; எங்களால் எப்படி ஓட்டுச் சாவடிக்கு வந்து உங்களுக்கு ஓட்டுப் போட முடியும்---வரமுடியாது' என்று நீங்கள் சொல்ல மாட்டீர்களா?

காங்கிரசுக்காரர்கள் ஊர்ஊருக்கும் சென்று, 'சென்னைக்கு மட்டும் படி அரிசியா? சென்னைக்கு மட்டும், காவிரி நீர்த் திட்டமா? சென்னைக்கு மட்டும் கூவம் சீர்திருத்தத் திட்டமா? தி. மு. க. ஆட்சி கிராம மக்களைக் கவனிப்பதில்லை—சென்னை நகரத்தைத்தான் கவனிக்கிறது' என்று குற்றஞ்சாட்டிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்; இப்போது எந்த அடிப்படையில் சென்னை நகரத்தில் ஓட்டுக்கேட்க வருவார்களோ—தெரியவில்லை!"

வகுப்புவாதத் தடுப்பு மசோதா

அமைச்சரவை ஒப்புதல்

புதுடில்லி, ஜூலை 24—

வகுப்புவாதக் குற்றங்களுக்குக் கடுந்தண்டனை விதிக்க வகை செய்து, இ.பி.கோ. பிரிவைத் திருத்துவதற்கான மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கிறது.

விரைவில் இம்மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும்.

இராசதந்திரத்தில் டில்லி தோற்றுவிட்டது!

ரஷ்யாவைக் குறைகூறிப் பயனில்லை

நாடாளுமன்ற மேலவையில் தில்லை வில்லாளன் இடித்துரை

புதுடில்லி, ஜூலை 23—

" 'இரஷ்யா தனிச் சுதந்தர நாடு; அதைக் குற்றஞ்சாட்டுவதில் பொருளில்லை; 'அது என்ன செய்யவேண்டும்' என்று இந்தியா உட்பட எந்த நாடும் உத்தரவிட முடியாது,

" இந்திய இராசதந்திரம் தோல்வியடைந்திருப்பதே இன்றைய நிலையைத் தோற்றுவித்திருப்பதற்குக் காரணமாகும்; அயல்நாட்டுக் கொள்கையும் இந்நிலைமை ஏற்பட முக்கியக் காரணமாக இருக்கிறது.

" இந்தியா, தன் நண்பர்களை ஒவ்வொருவராக இழந்து வருவதற்கும் மத்திய அரசின் அயல்நாட்டுக் கொள்கைதான் பொறுப்பேற்க வேண்டும். நண்பர்களை இழந்துகொண்டு எல்லைகளில் விரோதிகளை அது சேர்த்து வருகிறது "

என்று, நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் குற்றஞ்சாட்டினார்.

பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி தருவது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் கொணர்ந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் கூறியதாவது:—

" நமது வெளிநாட்டுக் கொள்கையில் குறைகள் இருந்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டு உள்ளது; எனவே வெளிநாட்டுக் கொள்கையில் தக்க மாறுதல்கள் செய்யவேண்டும்--குறைகளைப் போக்க வேண்டும்.

" டெல்லி அரசின் திறமை முழுவதும், காங்கிரசு அல்லாத அமைச்சர்களைக் கவிழ்ப்பதற்கே பயன்படுகிறது! இராஜதந்திரத் துறையில் டெல்லி அரசு தோற்றுவிட்டது!

" தாஷ்கண்டு மாநாட்டில், இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் 'நடுவர்' ஆக இரஷ்யா நடந்துகொண்டது; எனவே, பாகிஸ்தானுக்கு இப்போது ஆயுதம் கொடுப்பதை நாம் தடுக்கமுடியாது:

" நிலைமையை எவ்வித கோபதாபமும் இல்லாமல் நன்கு பரிசீலனை செய்யவேண்டும்."

சுயாட்சித் தத்துவம் பிறந்ததற்குக் காரணம்?

அறிஞர் அண்ணு விளக்கம்

சென்னை, ஜூலை 24—

"தொழில் அமைப்பு, மாநில அதிகாரத்திற்கு உட்பட்டதுதான்; ஆனால், தொழில்துறைகளை அமைப்பதற்குப் பிற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் அதிகாரம் மாநிலத்திற்கு இல்லை; இயந்திரம் வாங்கும் வசதியும் அங்கே இல்லை; 'தொழில் அமைப்பு மாநில அரசுக்கு உரியது—தொழிலுக்கு லைசென்சு தருவது மத்திய அரசுக்கு உரியது' என்று வெகு தந்திரமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள்!

"போக்குவரத்து மாநில அரசுக்குரியது; எனினும், அந்தப் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து—லாரிப் போக்குவரத்துத்தான்! ஆனால், கப்பல் போக்குவரத்தும், விமானப் போக்குவரத்தும், துறைமுகப் பராமரிப்பும் மத்திய அரசினுடையது!

"இவ்விதம் மேலதிகாரங்கள் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான், மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்தது!

"மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர, அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல!"

இவ்வாறு அறிஞர் அண்ணு அவர்கள், மத்திய அரசின் மேலதிகாரங்கள் பற்றி மாநில சுயாடசிக் கருத்தரங்கில் விளக்குகையில் சுட்டிக்காட்டினர். இதுபற்றி மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இன்றையத்தினம் மாநில அரசுக்குள்ள வேலை என்ன?—மக்களுக்குச் சோறு போடுவது—வேலை வாய்ப்புத் தருவது—தொழில் நீதியை நிலைநாட்டுவது—சுகாதாரத்தைப் பேணுவது—கல்விச் செல்வத்தை வளர்ப்பது போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்வதுதான்!

ஆனல் மத்திய அரசின் வேலை என்ன?—நாடக மேடையில் வரும் இராசாவைப்போல், மாதம் ஒரு முறை மாநில அமைச்சர்களை டில்லியில் கூட்டி, 'பள்ளிக்கூடங்களில் கல்வி எப்படி இருக்கிறது? காலரா நோய் தடுக்கப்பட்டதா?' என்று கேட்டுக்கொண்டிருப்பதுதான்! இப்படி தர்பார் பேச்சுப் பேசும் பொறுப்புதான் டில்லிக்கு இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை!

மக்களின் சுகதுக்கங்களோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர, மத்திய அரசு அல்ல!

மக்கள்மீது அக்கறை இருக்கலாம் மத்திய அரசுக்கு; ஆனல், அது எப்படிப்பட்ட அக்கறை?—குடிசைப் பகுதியில் தீப் பற்றியதும், மூன்று மாடியிலுள்ள சீமான், 'ஏதோ கரும்புகை தெரிகிறதே; பெரும் தீ விபத்துப்போலிருக்கிறதே' என்று கூறுவானே—அதைப் போன்ற அக்கறைதான் அது!

ஆனல் குடிசையில் தீப் பற்றியதும் பதறித் துடிப்பவர் யார்?—அந்தக் குடிசைக்குப் பக்கத்திலுள்ள குடிசைவாசிதான்!

அதைப்போல், மாநில அரசினர்தான் மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்கவேண்டியவர்கள்!

நாளையத்தினம் கேரளத்து ரேஷன் கடையில் அரிசி இல்லை என்ருல், பதில் சொல்லவேண்டியவர் நம்பூதிரிபாடே தவிர, மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் அல்லர்!

இரயில்வே பயர்மென்களின் வேலைநிறுத்தம் நடந்தது; அது கண்டு பதறியவர்கள் யார்?—நானும், நம்பூதிரிபாடும்தான்; ஆனல், அப்போது டில்லி அமைச்சர்கள் எங்களைச் சந்தித்தபோது வெகு அலட்சியமாக, 'என்ன ஆயிற்று அந்தப் பயர்மென்களின் வேலைநிறுத்தம்?' என்றுதான் கேட்டார்கள்; ஏனெனில் அதனல் பாதிக்கப்படுபவர்கள், நாங்கள்!

அதிகாரம் தேவைக்கு அதிகமாகக் குவிந்துவிட்டதால் என்ன நடக்கிறது? நான் அண்மையில் டில்லி உணவு அமைச்சகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்; உணவு அமைச்சர் ஊரில் இல்லாததால், துணையமைச்சர் ஷிண்டே பேசினர்; 'கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலிருந்து சர்க்கரையை வெளிக்கொணரும் உத்தரவு டில்லியிலிருந்து வராததால் பெருத்த நஷ்டம் ஏற்படும்' என்பதை அவருக்குக் கூற முயன்றேம்; 'கள்ளக்குறிச்சி' என்ற பெயரைப் புரிந்துகொள்ள 15 நிமிடமாயிற்று! பெயரைப் புரிந்துகொள்ள முடியாததற்காக அவர்மீது நான் குற்றம் சாட்டவில்லை.

சர்க்கரை ஆலை இருப்பது தமிழ் நாட்டில்; 'அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லியில்' என்று அதிகாரத்தைப் பிரித்துத் தந்தார்களே — அவர்கள்தான் குற்றவாளிகள்!

இப்படி கள்ளச்குறிச்சி சர்க்கரை ஆலையிலிருந்து காட்பாடி சிறு தொழிற்சாலைவரையில் எல்லா விதமான சிறிய பிரச்சினைகளிலும் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருப்பதன் விளைவுதான் பெரிய பிரச்சினைகளில் அதிகக் கவனம் செலுத்த முடியாமற் போய்விடுகிறது என்பதால்தான், 'அதிகாரங்கள் டில்லியில் குவிக்கப்படக்கூடாது' என்கிறேம்!

'வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்' என்பது தவறு!

மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களானல், அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கி பாதுகாப்புப் போன்ற பெரிய பிரச்சினைகளில் சோடை போய் விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்!

இன்னென்றையும் நான் கேட்க விரும்புகிறேன்; இதைச் சொல்வதன் மூலம், 'அண்ணுதுரை பழைய பிரிவினை வாதத்திற்கு வந்துவிட்டான்' என்று தயவு செய்து கருத வேண்டாம்.

'பிரிவினை கேட்போம்' என்பதற்கு ஒரு துளியும் இடமில்லை; நானே கழகத்தைச் சார்ந்தவர் எவருமோ அந்தக் கோரிக்கையைப் புதுப்பிக்கமாட்டோம்! ஆனல், யாருமே அந்தக் கோரிக்கையைப் புதுபிக்கமாட்டார்கள் என்று நான் கூறமுடியாது; 'என் கழகத்தைச் சார்ந்தவர்கள் புதுப்பிககமாட்டார்கள்' என்ற அளவில்தான் கூறுகிறேன்; ஏனெனில், எல்லோருடைய மனதையும் பூட்டி என் கையில் சாவியை நான் வைத்துக்கொண்டிருக்கவில்லை!

ஆகவே என்னைப் பற்றி டில்லி அரசுக்குத் தெரியும்—காங்கிரசுத் தலைவர்கள் அங்கே என்னைப் பற்றி கலசமூட்டி நிச்சயம் கெடுக்க முடியாது!

என்னைப் பற்றி அங்கே கசப்பு மூட்டுவது காங்கிரசுக்காரர்களுக்கு இனிப்பாக இருக்கலாம்; அது பலிக்காதபோது, அதுவே அவர்களுக்குக் கசப்பாகவும் முடியலாம்!

அப்படியே எங்களுக்குள் விரோதம் மூட்டி எங்களை பதவியிலிருந்து விலககிவிடடால், நாங்கள் வலிவற்றவர்களாகவா போய் விடுவோம்! 'பதவிக்கு வந்ததால் இருக்கிற வலிவை இழந்தோமே' என்று எண்ணுபவர்கள் நாங்கள்!

உள் மனம்—'பதவியை விட்டுப் போ' என்கிறது! கடமை—'இரு' என்கிறது! ஆகவே, 'பதவியைத் துறந்தால் வலிவற்றுப் போய்விடுவோம' என எண்ண வேண்டாம்!"

கருத் தடைக்குப் புதிய சாதனம்

புதுடில்லி, ஜூலை 24—

'லூப்'-புக்குப்பின் தற்போது, 'ஆன்டிகன்' என்ற புதியதோர் கருத்தடை சாதனம் உருவாகியிருக்கிறது.

இரு ஆண்டுகளுக்குமுன், 'லூப்' திட்டத்தை மத்திய சுகாதார அமைச்சகம் உற்சாகத்துடன் மேற்கொண்டது; ஆனல், எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் காண முடியவில்லை; பல்வேறு சங்கடங்கள் இருந்ததே காரணம்.

பெரும்பாலான பெண்களுக்கு 'லூப்' சரியாகப் பொருந்தவில்லை; 'லூப்'புடன் இணைக்கப்பட்டிருந்த நூல் தொல்லையாக இருந்தது.

'ஆன்டிகன்' என்ற புதிய சாதனத்தில் இத்தகைய நூல் இல்லை; 'சிக்கல் எதுவும் இல்லாத சாதனம்' என தற்போது பிரபலப்படுத்தப்படுகிறது.

புதிய சாதனம், டென்மார்க்கில் தயாரிக்கப்படுகிறது. மேற்கு வங்க அரசு இதனை விரிவாகப் பரீட்சித்துப் பார்த்துள்ளது. பெண்கள் இதனைப் பெரிதும் ஏற்பதாகக் கூறப்படுகிறது.

துயர் துடைப்பு நிதி

சென்னை, ஜூலை 24—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிககப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு 16—7—68 அன்று வந்த தொகை ரூ 73.80 ஆகும்.

இதுவரையில் ரூ 38,10,028 35 சேர்ந்துள்ளது.

மூடப்பட்ட பஞ்சாலைகளை திறக்க நடவடிக்கை

மக்களவைக் கேள்விக்கு அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, ஜூலை 22—

"பஞ்சாலைகள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தயாராயிருந்தால் இப்போதைய கடினமான நிலைமையைச் சமாளிக்க முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவியளிக்க அரசு தயாராக இருக்கிறது"

என்று வர்த்தகத் துறை அமைச்சர் தினேஷ் சிங், மாநிலங்களவையில் கூறினர்.

மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் பற்றிய விவரங்களையும் அமைச்சர் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தில் 21-ஆலைகளும், கேரளத்தில் 4-ஆலைகளும் மூடப்பட்டிருக்கின்றன; இதனல் 14,717-பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம் கூறிய யோசனைக்கிணங்க, 20-ஆலைகளைப்பற்றி விசாரணை நடத்த மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன; இந்தக் குழுக்களின் அறிக்கை கிடைத்தபிறகு மேல் நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலனை செய்யப்படும். தமக்கு உதவி வேண்டுமென்று கேரள அரசு, மத்திய அரசிடம் கோரவில்லை."

கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு உதவ ரூ. 1-கோடி

"கைத்தறித் துணிகள் ஏற்றுமதிக்கு உதவுவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று அமைச்சர், மற்றெரு கேள்விக்குப் பதிலளித்தார்; 'ஏற்றுமதி பற்றி விவாதிப்பதற்காக ஆகஸ்டுத் திங்களில் ஒரு மாநாடு நடத்தப்படும்' என்ருர்.

புதுவை — மாகியில் இயங்கும் நூற்பாலைகளுக்கு நிதிநெருக்கடி

உதவி அளிக்கும்படி மத்திய அரசிடம் முறையீடு

மாகியிலும், புதுவையிலும் இயங்கிக் கொண்டுவரும் நூற்பாலைகளின் நிதி நெருக்கடியைச் சமாளிக்கும்பொருட்டு அவைகளுக்கு முறையே ரூ 7 இலட்சமும, ரூ 50 இலட்சமும் உதவி அளிக்கும்படி புதுவை மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இத்தகவலை, அமைச்சர் தினேஷ் சிங், நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடடதாவது:—

"புதுவை நூற்பாலையின் நிதி—மற்றும் செயலதிறன் பற்றிய நிலைமையை ஆராயும் பொருட்டு நிபுணர்கள் குழு ஒன்றை அமைக்குமாறும் மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

மாகி ஆலையின் நிலைமை பற்றி ஆராய அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது புதுவை ஆலை சம்பந்தமாக விரைவில் குழு அமைத்து ஆராயுமாறு நூற்பாலைக் கமிஷனர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்; இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகே புதுவை ஆலை கேட்டிருக்கும் ரூ. 50 இல ்சம் உதவிபற்றி முடிவு செய்யப்படும்."

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்கு நிதியுதவி

புதுடில்லி, ஜூலை 24—

நடப்பு நிதி ஆண்டில், குடும்பக் கட்டுப்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மத்திய சுகாதார--குடும்பக் கட்டுப்பாடு--நகர்ப்புற வளர்ச்சித் துறை பல்வேறு மாநிலங்களுக்கும் மொத்தம் ரூ. 26 15 கோடி ஒதுக்கியிருக்கிறது.

இந்த நிதியுதவியில், தமிழ்நாட்டுக்கு ரூ. 1.58 கோடி கிடைக்குமாம்.

மற்ற மாநிலங்களுக்கான ஒதுக்கீடுகளின் விவரம் வருமாறு:—

கேரளம்—ரூ. 1.3 கோடி; ஆந்திரம்—ரூ 2.42 கோடி; மைசூர்—ரூ 1 6 கோடி; உத்தரப் பிரதேசம்—ரூ. 3.19 கோடி; மகாராட்டிரம்—ரூ. 2 9 கோடி; மத்தியப் பிரதேசம்—ரூ 2.44 கோடி; குசராத்—ரூ. 1.8 கோடி; பீகார்—ரூ. 1.58 கோடி; இராஜஸ்தான்—ரூ. 1.55 கோடி; மேற்கு வங்காளம்—ரூ 2 05 கோடி.

வாழ்க்கைச் செலவு குறைகிறது!

சென்னை, ஜூலை 24—

ஜூலை 6-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி நான்கு புள்ளிகள் குறைந்து 682-ல் நின்றது.

பருப்பு, காய்கறிகள், புளி, வெள்ளைப் பூண்டு, நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

கல்வி வளர்ச்சி குன்றிவிட்டதா?

காங்கிரசாரின் குற்றச்சாட்டுக்குப் பதில்

கழக ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

மதுரை ஜூலை 21—

"'தி. மு. க. ஆட்சியில் கல்வி வளர்ச்சி தடைப்பட்டுவிட்டது' என்ற காங்கிரசுக் கட்சியினர் கூறுகின்றனர். கல்விக்காகத் தமிழக அரசின் வரவு--செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 44 கோடியிலிருந்து ரூ. 58 கோடியாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கல்வி வளர்ச்சியில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறைக்கு இது ஒன்றே போதும் சான்று" என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு தெரிவித்தார்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபின் பெருகியுள்ள கல்வி நிறுவனங்கள் பற்றிய புள்ளி விவரங்களையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

படி அரிசித் திட்டம்

இங்கு நடைபெற்ற தென்காசி வெற்றிவிழாக் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:—

"தி. மு. க. ஆட்சி செயல்படுத்திய படி அரிசித் திட்டத்தால்தான் தமிழகத்தில் பல பொருள்களில் விலைகள் இறங்குமுகமாக உள்ளன. அரிசி விலை குறைந்து ஒரு கட்டுத் திட்டத்துக்கு வருமானல், ஏனைய பண்டங்களின் விலைகள் தாமாகக் குறையும். இதனை நன்ருக உணர்ந்தே முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், படி அரிசித் திட்டத்தைக்கொண்டுவந்தார்கள்.

அண்ணு அவர்கள் கேட்டுக்கொண்டபடி, ரூ. 10 கோடி முதல் ரூ. 12 கோடி வரையில் கொடுத்துதவ டெல்லி அரசு ஒப்புக்கொண்டிருந்தால், மற்ற இடங்களிலும் படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்க முடியும்.

படி அரிசித் திட்டத்துக்கு நிதியுதவ வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கை நியாயமானதேயாகும். ஏனெனில், வருமானம் வரக்கூடிய பல வரி இனங்களை மத்திய அரசே வைத்துக்கொண்டுள்ளது. கலால் வரிமூலம் மத்திய அரசுக்கு நிறைய வருமானம் கிடைக்கிறது.

அறிஞர் அண்ணு அவர்கள் எந்த ஒரு திட்டததைக்கொண்டு வந்தாலும், அது பெரும்பான்மையான மக்களுக்கு நன்மை பயக்ககக்கூடியதா என்பதை யறிந்தே செயல்படுத்துகிறார்கள்; இதுவே அண்ணுவின் கொள்கை. இந்தக் கொளகையை இந்த அரசு உறுதியாகக் கடைபிடிக்கும்."

படுதோல்வி கண்ட தங்கக் கட்டுப்பாட்டுக்குப் புத்துயிரா?

மக்களவையில் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, ஜூலை 22—

"மொரார்ஜி தேசாய் ஈன்றெடுத்த தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அவர் கையாலேயே புதைகுழிக்கு அனுப்பி வைக்க வேண்டும்"

என்று, நாடாளுமன்ற மக்களவையில் பல உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர்.

புதிய தங்கக் கட்டுப்பாட்டு மசோதாவை இன்று நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் மக்களவையில் கொண்டுவந்தார்.

இந்த மசோதாவை எதிர்த்து, எஸ். எம். பானர்ஜி (சுயே.), மது லிமாயி (ச. சோ.), ஜார்ஜ் பெர்ணண்டஸ் (ச.சோ.), மற்றும் பல உறுப்பினர்கள் பேசினர்.

"தங்கத்தின் விலையைக் குறைப்பது வெளிநாட்டிலிருந்து தங்கம் கடத்தப்பட்டு இங்கு வருவதைத் தடுப்பது—முடங்கிக் கிடக்கும் தங்கத்தை வெளியே கொண்டு வருவது—ஆகிய மூன்று நோக்கங்களைக் கொண்டதே தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம்; ஆனால், இந்த மூன்று நோக்கங்களும் வெற்றி பெறவில்லை — படுதோல்வி கண்டன"

என்பதை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எடுத்துரைத்து வாதிததனர்.

"எண்ணற்ற பொற்கொல்லர்களின் குடும்பங்களை அல்லலுக்குள்ளாக்கிய இந்தச் சட்டத்தை அடியோடு எடுத்துவிட வேண்டும்"

என்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

பின்னர் மசோதா, ஆளும் கட்சியினரின் வாக்கு எண்ணிக்கை பலத்தால் நிறைவேறியது.

தமிழகக் கல்வி ஆலோசனைக் குழு!

முதலமைச்சர் அண்ணா தலைமையில் திருத்தி அமைப்பு

சென்னை, ஜூலை 24—

தமிழகக் கல்வி ஆலோசனைக் குழுவை 24 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கியதாகத் திருத்தி அமைக்க மாநில அரசு முடிவெடுத்திருக்கிறது.

இக்குழுவிற்கு முதலமைச்சர் தலைவராகவும், கல்வியமைச்சர் துணைத் தலைவராகவும் இருப்பர்.

ஏனைய உறுப்பினர்களில், உள்ளாட்சித் துறை அமைச்சரும், கீழ் சட்டப் பேரவை—மேலவைகளின் எதிர்க் கட்சித் தலைவர்களும் அடங்குவர். குழுவில் 17 பேர் கீழ் சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருப்பர்.

மேயர் அபிபுல்லா பேக் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இலட்சுமணசாமி அவர்களும் குழுவில் உள்ளனர்.

குழு தேவைப்படும்போதெல்லாம், அண்ணாமலை—மதுரைப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுடன் கலந்தாலோசிக்கும்.

6 மாத இடைவெளியில் கூட்டம் நடத்த வேண்டிய இக்குழு தற்போதைய சட்டமன்றம் கலைக்கப்படும் வரையில் பதவியில் இருக்கும்.

65,000 ஏக்கரில் நெற்பயிர்கள் நாசம்

கோழிக்கோடு, ஜூலை 24—

கேரளத்தின் நெற்களஞ்சியமான குட்டநாடு பகுதியில் பெருமழை வெள்ளத்தால், 45,000 ஏக்கரில் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

கோழிக்கோடு, கண்ணனூர் மாவட்டங்களில் 20,000 ஏக்கரில் நெற்பயிர்கள், வெள்ளத்தால் அடியோடு நாசமாகியிருக்கின்றனவாம்.

நெற்பயிர்களினால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு மட்டும் ரூ. 2 கோடிக்குமேல் இருக்குமாம்.

நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய விவரம்

புத்தகமாக வெளிவருகிறது

சென்னை, ஜூலை 24—

1967-ல் தமிழகத்தில் நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கையின் இரண்டாவது தொகுதி இப்பொழுது வெளிவந்துள்ளது.

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது; முதல் பகுதியில் பொதுவான புள்ளிவிவர அட்டவணைகளும், இரண்டாவது பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல்பற்றிய புள்ளிவிவர அட்டவணைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

மக்கள் தொகை, வாக்காளர்கள், வாக்குச் சாவடிகள், வாக்குப் பதிவு அலுவலர்கள், வாக்குப் பதிவுச் சாதனங்கள், வாக்குப் பதிவு நிகழ்வுத் திட்டம் போன்ற விவரங்களையும், சட்டமன்றத் தொகுதி ஒவ்வொன்றைப்பற்றிய விரிவான தகவல்களையும் முதல் பகுதியில் காணலாம்.

மாவட்டவாரியாகச் சில அட்டவணைகளின் சுருக்கமும் தரப்பட்டிருக்கிறது. இரண்டாவது பகுதியில், நாடாளுமன்றத் தேர்தல்களில் வேட்பு மனுக் கொடுத்தல், திரும்பப் பெறுதல், வேட்பாளர்கள், அவர்களது ஏஜெண்டுகள், வாக்குகளை எண்ணுதல், முடிவுகள் பற்றிய விவரங்களைக் காணலாம்.

ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியாக, முந்திய மூன்று பொதுத் தேர்தல்களின் விவரங்கள் பல அட்டவணைகளில் தரப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் தேர்தல் முறை பற்றி ஆராய விருப்புவோருக்கும், பொது மக்களுக்கும் இந்த அறிக்கை பயனுள்ளதாக இருக்கும்.

இந்த இரண்டாவது தொகுதியை, 'அரசாங்க அச்சகம், வெளியீட்டுப் பகுதி, மவுண்ட் ரோடு, சென்னை-2' என்ற முகவரியிலிருந்தோ அல்லது மாவட்டங்களில் அதன் அங்கீகாரம் பெற்றுள்ள பல்வேறு ஏஜெண்டுகளிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம் இதன் விலை ரூ. 18 ஆகும்.

நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை மொத்தம் மூன்று தொகுதிகளைக் கொண்டது

பொதுத் தேர்தல் நடத்துவது சம்பந்தப்பட்ட பல்வேறு நிர்வாக வழி முறைகளை விளக்கமாகக் கூறும் முதல் தொகுதி ஏற்கனவே வெளிவந்திருக்கிறது; அதன் விலை ரூ. 29 25. அரசாங்க அச்சக வெளியீட்டுப் பகுதியிலிருந்தோ, அல்லது அதன் ஏஜெண்டுகளிடமிருந்தோ இதையும் வாங்கிக் கொள்ளலாம்.

கிராமத் தொழில்கள் வளர்ச்சித் திட்டங்கள்

ஆலோசனை கூறும் குழுவில் இரா. செழியன்

புதுடில்லி, ஜூலை 24—

நான்காவது திட்டத்தில் கைத்தறி, விசைததறி, கதா---கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில், பட்டு உற்பத்தி, கயிற்றுத் தொழில் ஆகியவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்கான திட்டங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்து திட்டக் குழுவுககு ஆலோசனை கூறுவதற்காக 19 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழு, நான்காவது திட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் தவிர, 1969-லிருந்து 1979 வரையான 10 ஆண்டுகால வளர்ச்சிக்கான யோசனைகளையும் தெரிவிக்கும்.

இக்குழுவுக்கு, திட்டக் குழு உறுப்பினர் ஆர். வெங்கடராமன் தலைவராக இருப்பார்.

மூன்றுவது திட்ட காலத்திலும், அதற்குப் பிறகான இரண்டு ஆண்டுகளிலும் இத் தொழில் துறைகளில ஏற்பட்டுள்ள முன்னேற்றததையும் இக்குழு பரிசீலனை செய்யும். நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கத் தலைவர் எம. பி. நாச்சிமுத்து ஆகியோரும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திருச்சியில் தீ விபத்துத் தடுப்பு நடவடிக்கை

நகராட்சித் தலைவர் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு

திருச்சி தீ விபத்துத் தடுப்புக் குழுக் கூட்டம் முனிசிபல் சத்திரத்தில் 18—7—68-ல் கே. பி. எஸ். கோன் தலைமையில் நடைபெற்றது; திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் எம். எஸ். மணி எம்.எல்ஏ, ஏ. வி. கிருஷ்ண மூர்த்திபெருமாள், மற்றும் பலரும்—இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பில் கே. டி. இராசு, எம். ஞானம் எம்.சி., டி. பி. இரத்தினம் எம்.சி., எம். பாவுதீன் எம்.சி., வி. இராசகோபால் மற்றும் பலரும்—காங்கிரசு சார்பில் என். எஸ். அபேதானந்தம், மற்றும் பலரும்—முஸ்லீம் லீக் சார்பில் ஜி. இப்ராகீம், ஏ எம். அனீப்—சர்வோதய சங்கச் சார்பில் அ. சனகசபை—மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பில் ஏ. எல். சண்முகம், ப. காசிநாதன், ஜார்ஜ்—ச. சோ. கட்சிச் சார்பில் டி. சி. சந்தசாமி—ஆகிய 35-பேர்கள் கலந்துகொண்டனர்.

நீண்ட பரிசீலனைக்குப்பிறகு தீ விபத்துப்பற்றிக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

திருச்சியில் நடைபெறும் தீ விபத்துக்களைத் தடுக்க திருச்சி மாவட்டக் கலெக்டர் இக்குழுவிற்குத் தலைவராக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது

குழுவின் அங்கம் வகிப்பவர்கள் :—

ஏ. எஸ். லூர்துசாமி (நகராட்சித் தலைவர்), எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., வி. சுவாமிநாதன் எம்.எல்.ஏ., ஆர். உமாநாத் எம் பி., கே. அனந்த நம்பியார் எம.பி., ஜி பராங்குசம் எம்.எல்.சி, கே. எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி, டி. எஸ். அருணாசலம் எம்.எல்.சி., டி. எஸ். சீனிவாசன் எம் எல்.சி., என். எஸ். அபேதானந்தம், அ. நடராசன், கே. பி. எஸ். கோன், ப. காசிநாதன், ஏ. எம். அனீப், டி. சி. கந்தசாமி, எம். ஆர். பழனிசாமி.

தீ விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கும் உடைமைகளை இழந்தவர்களுக்கும் இக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்தைத் தவிர்ப்பதுடன், மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்ப இடமளிக்காமல் தவருன தகவல்கள் கொடுப்போரைக் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவேண்டும் எனப் பொது மக்களை இக்குழு கேட்டுக்கொள்ளுகிறது.

வட்டவாரியாக சர்வ கட்சியினரைக் கொண்ட குழு அமைத்து தீத் தடுப்பு நடவடிக்கைகளையும், நிவாரண வேலையும் மேற்கொள்வதென்றும், அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதென்றும் தீர்மானிக்கிறது.

திருச்சி நகரில் குடிசைப் பகுதியெங்கும் உள்ள இடங்களில் மெயின் குழாயிலிருந்து தீயணைக்கத் தண்ணீர் எடுத்துக்கொள்ள இணைப்பு ஏற்படுத்தித் தரும்படியும் நகராட்சியே தீயை அணைக்கச் சொந்தமாகத் தீயணைப்பு வண்டிகள், லாரிகள வாங்கித் தீத் தடுப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டும் என இக்குழு, நகராட்சியைக் கோருகிறது.

திருச்சியில் உள்ள எம்.எப்.எஸ்சுக்குத் தீயணைப்புக்கு வேண்டிய கருவிகளையும், நகர வளர்ச்சிக்கேற்ப தீயணைப்பு லாரிகளையும் அதிகப்படுத்த அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இக்குழுவின் அமைப்பாளராக கே. பி. எஸ். கோன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைமைக் கழக நிதி--- இடைத் தேர்தல்கள் -- நகராட்சிகள் தேர்தல் நிதி

தலைமைக் கழக நிதி—இடைத் தேர்தல்— நகராட்சித் தேர்தல்கள் நிதிக்காக அவ்வப்போதும் ஆங்காங்கும் தோழர்களாலும், அமைப்புகளாலும் கழகப் பொருளாளரிடத்தில் சேர்ப்பிக்கப்படும் நிதி விவரம் :—

	ரூ. காசு
முன் இதழில் வெளியிட்ட விவரப்படி :	1,50,258.79
எப்போதும்வென்ருன் சம்புலிங்கம்	15.00
நெல்லை அரசப்பன்	101.00
கீழராசகுலராமன் சிதம்பரநாதன்	51.00
தென்காசி சுபபிரமணியம்	151.00
செங்கோட்டை இராசாராம்	76.00
தென்காசி மு. பாண்டியன்	101.00
நெல்லை எஸ். சுப்பையா	501.00
கோவில்பட்டி அன்பன்	100.00
நெல்லை இரா. முத்துகிருட்டினன்	101.00
கோவில்பட்டி எஸ். முத்துபாண்டியன்	100.00
சிவகாசி மா. சுடலைமுத்து	501.00
தென்காசி ஆறுமுகம்	222.00
பாளையங்கோட்டை ரா. சிவலிங்கம்	50.00
அம்பாசமுத்திரம் எம். தங்கையா	101.00
சாத்தூர் ஏ. சங்கரலிங்கம்	25.00
தென்காசி கே. உலகநாதன்	100.00
கடையநல்லூர் வள்ளிநாயகம்	51.00
விசுவநாதபுரம் எம். குத்தலிங்கம்	10.00
மேலப்பாளையம் எஸ். சண்முகநாதன்	5.00
நாகர்கோயில் சாமுவேல் பாண்டியன்	51.00
நாகர்கோயில் பால் சுந்தரராஜ	51.00
சங்கரன்கோவில் எம். செல்லதுரை	5.00
சென்னை-30 எஸ். பாலு	102.00
மதுரை பாலகிருஷ்ணன்	501.00
சேலம் எஸ். அய்யாசாமி	101.00
கடையநல்லூர் பரமேஸ்வரன் மூலம்	501.00
செங்கோட்டை எஸ். சாகுல் அமீது	101.00
மேலூர் க. மலைசாமி	10.00
குற்ருலம் எம். வைத்தியலிங்கம்	101.00
கோவை கே. ரங்கநாதன்	100.00
அம்பாசமுத்திரம் எஸ். தங்கவேல்	20.00
திருவைகுண்டம் ஆ. செல்லசாமி	5.00
திருச்செந்தூர் எஸ். திரவியம்	18.00
நெல்லை முத்தையன்	100.00
கோபாலகிருஷ்ணன்	500.00
ரெட்டியார்பட்டி சு. வேலாயுதம்	10.00
தச்சநல்லூர் வி. சண்முகவேல்	5.00
குன்னத்தூர் தமிழரசன்	3.00
மேலப்பாளையம் நைனா் முகம்மது	5.00
கல்லூர் எஸ். ஞானமுத்தையா	10.00
இலத்தூர் வ. சிதம்பரம்	20.00
கடையநல்லூர் புகாரி	201.00
நெல்லை பி. சுப்பையா	75.00
தென்காசித் தொகுதியில் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, மாலைக்குப் பதிலாகவும் தேர்தல் நிதியாகவும் கிடைத்த தொகை	712.50
தென்காசித் தொகுதியில் அண்ணா அவர்களிடம் மாலைக்குப் பதிலாக அளித்த கொகை	407.00
பாளையங்கோட்டை எம். சுப்பிரமணியம்	25.00
நெல்லை நகர் ஆர். அருணாசலம்	101.00
சாத்தூர் எஸ். அய்யாசாமி	50.00
சிவகாசி கு. வெங்கிடசாமி	100.00
புதுக்கோட்டை எஸ். நடராசன்	100.00
தஞ்சை எம். பண்டரிநாதன்	51.00
குற்ருலம் மா. காளியப்பன்	5.00
குற்ருலம் டி. குழந்தைவேலன்	3.00
தென்காசி சி. தங்கையா	5.00
பெரியகுளம் சேக் சுல்தான்	101.00
சென்னை கருணாகரன்	201.00
காஞ்சிபுரம் மா. வாசுதேவன்	100.00
காரைக்குடி எஸ். இராமசாமி	75.00
சிவகங்கை டி. சுந்தரராசன்	10.00
நெல்லை நகரம் மா. கரிகாலன்	101.00
நெல்லை நகரம் எஸ். சண்முககனி	101.00
நெல்லை நகரம் மு. கருப்பையா	101.00
விளாங்குடி க. பெரியசாமி	5.00
மேலூர் மா. செல்லையா	5.00
பசுமலை எம். எஸ். இராசு	10.00
மேலூர் எஸ். சந்திரசேகரன்	5.00
மதுரை இரா. பாண்டியன்	5.00
சென்னை எம். பாஸ்கரன்	100.00
செங்கற்பட்டு பி. முத்துசாமி ராசு	5.00
திருப்பூர் எஸ். கோவிந்தராஜ்	501.00
தென்காசி இராமையா	100.00
தென்காசி சேஷையா	100.00
செங்கோட்டை க. வெள்ளதுரை	25.00
பல தோழர்கள் மூலம்	32.00
ஆக மொத்தம் ரூ.	1,58,459.29

ஏவுகணை கவசமுறைக்கு ரூ. 197 கோடி!

ஆஸ்டின், ஜூலை 24—

செஞ்சீனாவின் அணு ஆயுதச் சக்தி அதிகரித்து வருவதற்கு எதிராக அமெரிக்காவைப் பாதுகாப்பதற்கு 'கோட்டைக் காவலன்' என்ற ஏவுகணை கவச முறைக்கான துவக்கச் செலவிற்கு 26.3 கோடி டாலர் (ரூ. 197.25 கோடி) மசோதாவில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன் கையெழுத்திட்டுள்ளார்.

ரூ. 1,350 கோடி செலவு

அமெரிக்காவிலும், வெளிநாடுகளிலும் இராணுவ அமைப்புகளுக்காக மொத்தம் 180 கோடி டாலர் (ரூ. 1,350 கோடி) செலவு ஆகும். இதற்கான நிதி ஒதுக்கீடுக்குத் தனி மசோதா கொண்டுவருவது குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது.

இலண்டனில் அயூப்கானுக்கு எதிர்ப்பு

தங்கியிருக்கும் ஓட்டல்முன் தீவட்டி ஆர்ப்பாட்டம்

இலண்டன், ஜூலை 24—

இலண்டனுக்குச் சென்றிருக்கும் பாகிஸ்தான் அதிபர் அயூப் கான், ஓட்டல் ஒன்றில் தங்கியிருக்கிறார்; அந்த ஓட்டலுக்கு எதிரில் சுமார் 150 பாகிஸ்தான் குடிமக்கள் தீவட்டிப் பந்தங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அயூப்கான் இலண்டன் வந்து சேர்ந்த சில மணி நேரத்திற்கெல்லாம் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பலாத்காரச் செயல்களும் ஏற்பட்டன.

பள்ளித் தேர்வு முறையில் புதிய ஏற்பாடு

ஆண்டு முழுவதும் படிப்பில் கவனம் செலுத்த ஊக்கமளிப்பு

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தகவல்

மதுரை, ஜூலை 24—

'மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிய தற்போது இறுதித் தேர்வுதான் அளவுகோலாக இருந்துவருகிறது; இதனால் மாணவர்களிடையே, 'இறுதித் தேர்வுக்குப் படித்து அதில் மதிப்பெண்களைப் பெற்றால் போதும்; மேல் வகுப்பிற்குச் சென்றுவிடலாம்' என்ற மனப்பான்மை இருந்துவருகிறது.

"இத்தகைய மனப்பான்மை மாணவர்களிடையே ஏற்படாமலிருக்கவும் ஆண்டு முழுவதும் அவர்கள் கல்வியில் முழு ஈடுபாடு கொள்ளவும், சுறுசுறுப்பாகக் கல்வியில் நாட்டம் செலுத்துவதற்கான ஊக்கத்தை ஏற்படுத்தவும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுவருகிறது; இதனால் கல்வியின் தரத்தையும் உயர்த்திவிட முடியும்"

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

மதுரையில், லேடி டோக் கல்லூரி மாணவர் சங்கத்தைத் தவக்கிவைத்துப் பேசுகையில், அத்திட்டம் பற்றி மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கல்லூரிகளில் திங்கள்தோறும் நடத்தப்படும் தேர்வுகளில், மாணவர்கள் பெறும் மதிப்பெண்களையும், விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் காட்டும் ஈடுபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு, இறுதித் தேர்வில் அவர்களுக்கு 50 சதவிகிதம் கூடுதலாக மார்க்குகள் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"இத்திட்டம், அடுத்த கல்வி ஆண்டுமுதல் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்."

இரங்கூனில் அண்ணா மணி விழா

பர்மா எம்.ஜி.ஆர். மன்ற ஏற்பாடு

இரங்கூன், ஜூலை 24—

ஆண்டுதோறும் பர்மா எம்.ஜி.ஆர். மன்றம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை, பர்மிய அமைச்சர்களை வரவழைத்துக் கொண்டாடிவருவது தெரிந்ததே.

இந்த ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவை, மலர் வெளியீட்டோடு கொண்டாட முடிவெடுக்கப்பட்டு, அதற்கான ஆய்வுக் கூட்டம் ஒன்று 30—6—68-ல், அண்ணா இரவுப் பள்ளியில் — திரு. எச். பி. அன்பழகன் தலைமையில் நடந்தது. ஆர்வம் கொண்ட பர்மா தமிழர்கள் பலர் கலந்துகொண்டனர்.

விழாவுக்குப் பர்மிய முன்னாள் தலைமையமைச்சர் ஊ-நூ, வெளிநாட்டு அமைச்சர் ஊதிகான் ஆகியோரை அழைப்பதென முடிவெடுக்கப்பட்டு — இதற்காக 60 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது:— தலைவராக இரா. சு. நெடுஞ்செழியன், செயலாளராக பூ. செ. புதியணன், பொருளாளராக எம். ஜி. சாமி, கணக்குத் தணிக்கையாளராக எம். எஸ். கே. கச்சிமுகையதீன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விழாவிற்கான ஏற்பாடுகள் விரைந்து நடைபெறுகின்றன.

மணிவிழாவிற்கான சிறப்பு ஏற்பாடுகளைச் சென்னையிலுள்ள பர்மா தமிழர் பிரதிநிதி எம். பெருமாள் கவனித்துவருகிறார்.

இரயில்வே அமைச்சரின் கடமை தவறிய செயல்

நாடாளுமன்றத்தில் நாத்பாய் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 23—

"இந்திய இரயில்வேயின் சில பகுதிகளில் வேலைநிறுத்தம் நடந்துகொண்டிருக்கையில் இரயில்வே அமைச்சர் பூனச்சா குடியரசுத் தலைவருடன் மாஸ்கோ சென்றார்; இது கடமை தவறியதாகும்; குடியரசுத் தலைவருக்கு இவருடைய துணை தேவையில்லை; அவருடன் வேறு ஒருவர் போயிருக்கலாம்" என்று மக்களவையில் பி. சோ. உறுப்பினர் நாத்பாய் குற்றஞ்சாட்டினார்.

திரு. பூனச்சா பதிலளிக்கையில் நாத்பாய் அவருடைய கருத்தைத் தெரிவித்தார் என்றும், இப்போது அவருடன் சர்ச்சை செய்யத் தயாராக இல்லையென்றும், அவர் எழுப்பும் எந்தப் பிரச்சினையையும் எதிர்நோக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

தாராபுரம் நகர தி.மு.க. மறுதேர்தல்

கோவை மாவட்டம் தாராபுரம் நகர தி.மு.க. கிளையில் நடைபெற்ற தேர்தலில் அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் தவிர, மற்ற பொறுப்புக்களின் தேர்தல்கள் குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளையொட்டி, பரிசிலனை செய்து மறு தேர்தல் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, தாராபுரம் கிளையின் அவைத்தலைவர் பொறுப்பு தவிர மற்ற பொறுப்புகளுக்கான மறுதேர்தல், 29-7-68 திங்கள் காலை 10-மணிக்கு தாராபுரம் பயனியர் விடுதியில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

பால்பண்ணையில் விஷமச் செயல்?

4,000 கிலோ வெண்ணெய் அழிக்கப்பட்டது

பெங்களூர், ஜூலை 24—

ஐ. நா. (யுனிசெப்') உதவியுடன் மைசூர் அரசு நடத்தும் பால் பண்ணையில், கெட்டுப்போன வெண்ணெயைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்தனர்; கடந்த 2 நாட்களுக்குள் 4,000 கிலோவுக்கு மேல் வெண்ணெய் தீயில் உருக்கிவிடப்பட்டது.

பால் பண்ணை இயக்குநர் ஜி. எச். ஆதிராஜய்யா, 'இது நாச வேலை என்று தெளிவாகத் தெரிகிறது' என்று கூறினார்.

வெண்ணெய்ப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள குளிர்ச்சாதன அறைக்குள் தண்ணீர் புகுவதற்கு இடம் தந்துள்ளதாகவும் இது விஷமிகள் செயலாக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

வெண்ணெய்மீது காலடிகள் படிந்திருந்தன; அதனால், வெண்ணெயை அழிப்பதென முடிவு செய்யப்பட்டது.

அதை விற்றால் சுகாதாரக் கேடு ஏற்படுமென்று அஞ்சி இவ்வாறு செய்யப்பட்டது.

சென்ற வாரத்தில் பால் பண்ணை ஊழியர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்தனர். பழைய வெண்ணெயுடன் புதிய வெண்ணெயைக் கலந்துவிட்டதாக ஊழியர்மீது நடவடிக்கை எடுத்ததையடுத்து வேலை நிறுத்தம் செய்தனர்.

உதவி கால்நடை நலத் துறையமைச்சர் தலையீட்டின்பேரில் 12 மணி நேரம் கழித்து வேலைக்குத் திரும்பினர்.

வ.ஆ. மாவட்ட தி.மு.க. நகர — கிளைகளின் தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, வ. ஆ. மாவட்டத்தின் கீழ்க்காணும் கிளைகளுக்கான தேர்தல்கள் — கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆணையாளர்கள் தலைமையிலும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடத்திலும நேரத்திலும் நடைபெறும்:—

27—7—68

ஆம்பூர்

ஆணையாளர்: டி. பி. சீனிவாசன்
இடம்: கழகப் பணிமனை
நேரம்: பிற்பகல் 4-மணி

தானிப்பாடி

ஆணையாளர்: எம். என். இராமன்
இடம்: கழகப் பணிமனை
நேரம்: மாலை 4-மணி

வாணியம்பாடி

ஆணையாளர்: ஆர். சம்பங்கி
இடம்: பயனியர் விடுதி
நேரம்: காலை 10-மணி

28—7—68

அரக்கோணம்

ஆணையாளர்: மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம்: பயனியர் விடுதி
நேரம்: காலை 10-மணி

இராணிப்பேட்டை

ஆணையாளர்: பெ. தா. ஈசுவரப்பன்
இடம்: பயனியர் விடுதி
நேரம்: காலை 10-மணி

திருப்பத்தூர்

ஆணையாளர்: எம். எஸ். இராதாகிருஷ்ணன்
இடம்: பயனியர் விடுதி
நேரம்: காலை 10-மணி

திருவண்ணாமலை

ஆணையாளர்: இரா. தர்மலிங்கம்
இடம்: பயனியர் விடுதி
நேரம்: காலை 10-மணி

குடியேற்றம்

ஆணையாளர்: மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம்: பயனியர் விடுதி
நேரம்: மாலை 4-மணி

கலசப்பாக்கம்

ஆணையாளர்: பி. கே. முனுசாமி
இடம்: கழகப் பணிமனை
நேரம்: காலை 10-மணி

நிஜலிங்கப்பாவின் நெஞ்சம் பேசுகிறது!

பெரிய உர ஆலையை குசராத்தில் நிறுவுவதற்குக் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, ஜூலை 24—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் குசராத் மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் உரத் தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டக் குழு ஒப்புக்கொண்டிருப்பதற்கு அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"விவசாயத்துக்கு இன்றியமையாத உர உற்பத்தியை நாட்டின் ஒரே ஒரு பகுதியில் மிகப் பெருமளவில் மேற்கொள்வது ஒவ்வாததாகும்; ஒவ்வொரு மாநிலத்திலும் சிறிய அளவில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலையை அமைப்பதுதான் பலன் அளிக்கும்"

என்று திட்டக் குழுவிடம் அவர் கருத்தறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட திட்டக் குழு முன்வந்துள்ளது; அதற்கிணங்க காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவுடன் திட்டக் குழு விவாதித்தது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

25—7—68

சென்னை 10-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் கே. எஸ். அருணாசலம் இரவுப் பள்ளித் திறப்பு விழாப் பொதுக்கூட்டம்; மாலை 7-மணிக்கு வண்ணை மணிகண்ட முதலி 6-வது சந்தில்; தலைவர்: வி. பி. சாரதி; பேசுவோர்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. மு. வேதாசலம் எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.எல்.சி., நா. தமிழன்பன், நா. இராசமன்னர். (காலை 8-மணிக்கு கே. சி. ஆறுமுகம் தலைமையில் தலைவர்கள் படத் திறப்பும், இனிப்பு வழங்குதலும் நடைபெறும்; த. சேதுராசன், பி. கே. மாரியப்பன், என். இராசமன்னர், உதயசூரியன், குசால் தாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.)

காரைக்குடி

எழுச்சி மன்றம், அண்ணா மன்றம் ஆகியவை சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7 மணிக்கு செஞ்சைத் திடலில்; தலைவர்: ம. இராமசாமி; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., சித. சிதம்பரம், பி. முத்துராமன், மு. மனோகரன், வை சுப்பிரமணியன், சுப. இலட்சுமணன்.

சிதம்பரம்

8-வது வட்ட தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 6 மணிக்கு சின்ன செட்டி தெருவில்; தலைவர்: எம். நடராசன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், பொன். சொக்கலிங்கம், எம். எஸ் நடராசன் எம்.சி., ப. நடேசன், அ. கி. சோமசுந்தரம் எம்.சி., சு. கோவிந்தராசன், தவமணி.

நெல்லிக்குப்பம்

மஜீத் நினைவு மன்ற நான்காம் ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு பாவடித் தோப்புத் திடலில்; தலைவர்: என். பி. ஏ. எஸ். பெரியண்ணன்; பேசுவோர்: ஏ. பி. மனோன்மணி, க. சு. மணிமாறன், எஸ். ஏ. ரசாக், மற்றும் பலர்.

ஈரோடு

27-வது வட்ட தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: மு. சின்னச்சாமி எம்.எல்.ஏ.; பேசுவோர்: எம். மாரியப்பன், க. சின்னப்பன், ந சு. முனுசாமி, மு. ப. இராமலிங்கம். (சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

26—7—68

பண்ணுருட்டி

முதல் வார்டு பொதுமக்கள் சார்பில் மாலை 6-மணிக்கு தட்டாஞ்சாவடி வள்ளுவர் திடலில்; தலைவர்: சி. சின்னத்தம்பி; பேசுவோர்: மு. பட்டுசாமி, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ஏ. மணி, ஆர். தண்டபாணி, ந. சின்னையன், சி. பக்கிரிசாமி, கே. பி. நூர்முகம்மது, இ. ந. சுப்பிரமணியம். (மதுரை கண்ணம்மா—தங்கராசு கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

கலைக்குழு முகவரி

மதுரை முத்து கலைக் குழு,
c/o எஸ். டி. நடராசன்,
எஸ். எம். வி. பிரஸ்,
108, திண்டுக்கல் ரோடு,
மதுரை—1.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.